IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 71/2023

Deposition of Witness : PW 1

Name : ஏகாம்பரம்(வயது – 51)

Father's Name /W/o : த/பெ ஆறுமுகம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : காஞ்சிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 03.06.2025.

**குறுக்கு விசாரணை:**

1. முதல் பிரதிவாதி என்னுடைய மூத்த சகோதரன் என்றால் சரிதான். மற்ற வாதியும் என்னுடைய சகோதரர்கள் என்றால் சரிதான். தாவின் நான் படித்து பார்த்து கையொப்பமிட்டேனா என்றால் சரிதான். தாவா சொத்து நிலமா அல்லது மனையா என்றார் நிலம். நான் என் தாவாவில் தாவா சொத்து village site என்று குறிப்பிட்டேனா என்றால் சரிதான். நான் அவ்வாறு village site என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான்.

2. தாவா சொத்தின் சர்வே எண்.209 ல் 2.74 ஏக்கர் நிலம் என் தாத்தா திரு. தணிகாசலம் நாயக்கர் ஆண்டு அனுபவித்து வந்தார் என்று என் பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டேனா என்றால் சரிதான். 21.07.1933 தேதியிட்ட பாப்பிவினை பத்திரம் என் தாத்தா கந்தசாமி அவர்களுக்கு சர்வே எண்.209 ல் 0.93 சென்ட் ஒதுக்கப்பட்டது என்று என் தாவாவில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என் தாத்தாவிற்கு பாகப்பிரிவினை மூலம் 2 ஏக்கர் 74

செண்ட் ஒதுக்கப்பட்டது தாவாவில் குறிப்பிட்டுள்ளது தவறு.

3. என் தாவா பத்தி 4 ல் பாகப்பிரிவினை மூலம் யார்யாருக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. நான் 21.07.1933 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் தாவா பத்தி 4ல் ஆவண எண்.2550/1946 (வா.சா.ஆ – 5) பத்திரத்தின் மூலம் என் தாத்தா கந்தசாமி அவர்கள் சர்வே எண்.209 ல் 0.93 செண்ட் நிலத்தை என் தகப்பனார் ஆறுமுகம் அவர்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. – 5 ல் குறிப்பிட்டுள்ள பொன்னப்ப குமாரன் ஆறுமுக நாயக்கர் எனக்கு சம்பந்தப்பட்டவர் இல்லை என்றால் சரிதான். பொன்னப்ப நாயக்கர் ஆறுமுக குமாரனுக்கு தனிகாச்சலம் குமாரன் அவர்களுக்கு எழுதி கொடுத்த விக்கரயப் பத்தித்தில் சர்வே எண்.209 ல் 0.93 செண்ட் எழுதி கொடுத்தார்களா என்றால் சரிதான்.வா.சா.ஆ. – 5 செட்டில் மெண்ட் பத்திரம் இல்லை கிரையப்பத்திரம் எனறால் சரிதான். தாவா பத்தி 4 ல் என் தாத்தா தகப்பனாருக்கு செட்டில் மெண்ட் எழுதி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். தாவா பத்தி 4 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரிதான்.

5.என் தகப்பனார் ஆறுமுகம் வா.சா.ஆ – 2 சர்வே எண்.209 ல் 0.68 1/2 செண்ட் பரமசிவ நாயக்கர் மற்றும் பழனி நாயக்கரிடமிருந்து கிரையம் பெற்றாறா என்றால் சரிதான். நான் என் தாவா பத்தி 3 ல் ஏக்கர் 2.74 என்றும் பத்தி 6 ல் 2.73 செண்ட் என்றும் சொத்து விவரத்தில் ஏக்கர் 2.24 செண்ட் என்று மாற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் சரியாகதான் குறிப்பிட்டுள்ளேன் தாவாவில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்து விவரம் எனக்கு சரியாக தெரியாததால் நான் தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தில் பாகம் உள்ளதாக நான் என் தாவாவில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நான் தாவாவில் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்தவோ அல்லது விற்கவோ கூடாது என்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி மட்டும் தான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 16.03.2023 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன். தாவா பத்தி 7 ல் குறிப்பிட்டுள்ள 1ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.111 நாற்பது ஆண்டுகளாக அவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் சட்டவிரோதமாக பட்டா பெற்று கொண்டார். பிரதிவாதி சட்டவிரோதமாக பட்டா பெற்றார் என்பதற்கு 40 வருடத்தில் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுத்தேன் நான் மாவட்ட ஆட்சியர், கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்தேன். நான் மேற்படி விபரத்தை நான் தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. அது சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(1 ஆம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**